ஆகஸ்ட் 30, 2017

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைகளை தட்டிக் கழிக்க நாம் எந்த சாக்குப் போக்கையும் அனுமதிக்க கூடாது.

***காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சர்வதேச நாள் அன்று***

***தமிழ் சிவில் சமூக, மனித உரிமை அமைப்பக்களின் அறிக்கை***

இன்று காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சர்வதேச நாள் ஆகும். மேலும் கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது போராட்டத்தை ஆரம்பித்து இன்றுடன் 192 நாட்கள் ஆகின்றன. வடக்கு கிழக்கில் இந்த போராட்டம் விஸ்தரிக்கப்பட்டு வவுனியா, மன்னர், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பல நாட்களாக வீதியில் இறங்கி மிகவும் கடுமையான வெட்ப தட்ப நிலைமைகளையும் பொருட்படுத்தாது போராடி வருகின்றனர். இது வரை அவர்களது அரசாங்கம் அவர்களது போராட்டத்தை கண்டு கொள்ளவில்லை. இச்சந்தர்ப்பத்தில் வடக்கு கிழக்கில் வேலை செய்யும் கீழ் கையெழுத்திட்ட அமைப்புக்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு தொடர்ந்தும் ஆதரவாக இருப்போம் என உறுதி கூறுகின்றோம்.

ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு முதல் பாராளுமன்ற சட்டத்தால் உருவாக்கப்பட்ட இன்னும் இயங்கு நிலைக்கு கொண்டு வரப்படாத காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பில் கொழும்பு பெரிய அளவில் அலட்டிக் கொள்கின்றது. ஆனால் காணமால் ஆக்கப்பட்ட உறவுகள் இந்த அலுவலகம் தொடர்பில் நம்பிக்கையற்று இருக்கின்றனர். முன்னைய ஆணைக்குழுக்கள் போன்றே இவ்வலுவலகமும் இயங்குமோ என அஞ்சுகின்றனர். எனவே தான் ஜூன் 12, 2017 அன்று சனாதிபதியை யாழ்ப்பாணத்தில் அவர்கள் சந்தித்த போது முதற்கட்டமாகவும் உடனடியாக சரணடைந்தோரின் பெயர் பட்டியலையும், தடுப்பிலும், இரகசிய முகாம்களில் வைக்கப்பட்டிருந்தோரின் பட்டியலையும் தொடர்ந்து தடுப்பில் இருப்போரின் பட்டியலையும் வெளியிடுமாறு கேட்டனர். அவர்களின் மகஜரை முழுமையாக நிறைவேற்றுவேன் என சனாதிபதி வாக்குறுதியளித்து நூறுக்கு மேற்பட்ட நாட்கள் கடந்து விட்டன. ஆனால் இந்த வாக்குறுதியும் இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளன. ஜனாதிபதிக்கு பல நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பியும் எந்தப் பதிலும் இல்லை. இந்த சூழலில் தான் காணாமல் போனோர் அலுவலகத்தை காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சந்தேகத்தோடு நோக்குகின்றனர். மேலும் காணாமல் போனோர் அலுவலகமானது உறவுகளைத் தேடும் அதிகாரம் மட்டுமே கொண்டிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு பொறுப்பானவர்களை பொறுப்புக் கூற வைப்பது தொடர்பில் அதற்கு அதிகாரமில்லை் வேறு பொறிமுறைகள் ஊடாக பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தவும் தவறுகிறது என்பது தொடர்பிலும் உறவுகள் ஆழ்ந்த கரிசனை கொள்கின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளோடு வேலை செய்யும் தரப்புக்கள் அனைத்தும் - அரசியல் காட்சிகள், சிவில் அமைப்புக்கள் உள்ளடங்கலாக - அவ்வுறவுகளின் நலன்களை முன்னிறுத்தி அவர்களின் தலைமைத்துவத்தை ஏற்று அவர்களின் தெரிவுகளுக்கு முன்னுரிமை அளித்து, உற்ற துணையாகவும் ஆதரவாகவும் செயற்படுவது தான் அறத்தின் பாற்பட்டது என ஆணித்தரமாக கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

சனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஜூன் 12, 2017 அன்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு அளித்த வாக்குறுதி தொடர்பில் உடனடியாக பதிலிறுக்க வேண்டுமென நாம் வலியுறுத்துகிறோம். அனைத்து சிவில் சமூக அமைப்புக்கள், தூதரகங்கள் மற்றும் மக்கள் குழுமங்களை காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைகளை வரித்துக் கொள்ளவும் அதற்காக அணிதிரளவும் இன்றைய தினம் அறைகூவல் விடுக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைகளை தட்டிக் கழிக்க நாம் எந்த சாக்குப் போக்கையும் அனுமதிக்க கூடாது.

**அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்**
**மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்.**
**தமிழ் சிவில் சமூக அமையம்**
**மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான மையம், திருகோணமலை.**
**மன்னார் பிரஜைகள் குழு**